# ஜனவிநோதினி.

இல. 8.] ஆகஸ்டுமீ 1875. [புஸ்த. VI.

## தாஜ்மஹால் என்னும் கோரி.

ஏறக்குறைய 250—வருஷத்துக்குமுன் ஷாஜிஹான் என்னும் மகம்மதிய அரசன் டில்லிசக்கரவர்த்தியாக அரசாண்டுவந்தான். அவன் ஆலோசனைத்திறமையுள்ள மந்திரிமார்களோடும், வெற்றிகள் பெறத்தக்க வீரர்களோடும் கூடி அரசுசெலுத்தி சிறப்புற்றிருந்தான். இப்படியிருந்தும், எல்லாவித மேன்மையும் தீவட்டியின்கீழ் விளக்காய்ப் போகும்படி விலையற்ற ஆபரணம் ஒன்று அவனுக்குக் கிடைத்திருந்தது. அதென்னவெனில், நிகரில்லாத ஒழுக்கமும் அழகும் நிறைந்த நூர்ஜிஹான் என்னும் பெண்ணாகிய ஆபரணம். ஒருவனுக்கு இவ்வுலகத்தில் கிடைக்கக்கூடிய சிறந்த பொருள்களில் மிகவும் மேன்மையான பொருள் நற்குண நற்செய்கைகளுள்ள மனையாட்டி. அப்படிப்பட்ட பெரும்பாக்கியத்தை ஷாஜிஹான் பெற்றிருந்தான். உயர்ந்த குணத்துக்குத் தகுந்ததுபோல் நூர்ஜிஹான் மகா மேலான அதிகாரம்பெற்று சகலவித ராஜகாரியங்களையும் பரிபாலனம்பண்ணிவந்தாள். அந்த அற்புதமான பெண் அவனுக்குக் கிடைத்தவழி என்னவென்றால்:

ஆக்ராபட்டணத்தில் அவனுடைய தகப்பனான ஜிஹாங்கிர் அரசாண்டுக்கொண்டிருந்த காலத்தில் ஷாஜிஹானும் மந்திரிமுதலான பெரியமனிதர்களும் வருஷாந்தரத்துச் சந்தைகளுக்குப் போவது வழக்கம். அந்தச் சந்தைகளில் உயர்ந்த குலஸ்திரீகள் நாணயமான வஸ்துக்களைக் கொண்டுவந்து விற்பதுண்டு. ஒருகாலத்தில் ஜிஹாங்கிர் வேடிக்கையாக அந்த ஸ்திரீகள் நவரத்னங்களை விற்கவேண்டுமென்றும், பெரியமனிதர்கள் அவர்கள் சொல்லுகிற விலைக்கு அவைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் உத்தரவுபண்ணி

ஞன். அப்படியே எல்லாரையும்போல அலிப்கானுடைய மகளாகிய நூர்ஜிஹான் என்னும் பெண்ணும் நவரத்தனங்களை விற்றுக்கொண்டிருந்தாள். ஷாஜிஹான் அவளண்டைபோய் உன்னிடத்தில் என்னயிருக்கிறதென்று கேட்க, அவள் ரத்னம்போல் பளபளவென்று பிரகாசிக்கும் ஒரு கற்கண்டுக்கட்டியை எடுத்துக் கொடுத்து இதன் விலை லக்ஷம் ரூபாய் என்றாள். அப்படியே அவன் அந்தத் தொகையைக் கொடுத்துவிட்டு அந்தக் கற்கண்டுக்கட்டியை எடுத்துக்கொண்டான். ஷாஜிஹான் அப்போது அவள் மிகவும் அழகாயிருப்பதுகண்டு, அவளோடு பேசத்தொடங்கி, அவ்ள் மிகவும் சாதுரியமும் சாமர்த்தியமுமுள்ளவளென்று தெரிந்துகொண்டு, அரண்மனைக்கு வரவழைத்து, சிலநாளைக்குப்பிறகு அவளையே கலியாணம்பண்ணிக்கொண்டான். தகப்பன்காலத்திற்குப் பிறகுச் சிம்மாசனம் ஏறி நூர்ஜிஹானுடைய ஒத்தாசையைக்கொண்டு ராஜ்ஜியபாரம் நடத்திவந்தான். ஷாஜிஹான் இருபதுவருஷகாலம் நூர்ஜிஹானாகிய ஒரு மனைவியோடே திருப்தியடைந்திருந்தான். சாதாரணமாய் அநேகமனைவிகள் வைத்துக்கொண்டிருந்த மகம்மதிய அரசர்களுக்குள் இந்தச் சங்கதி மிகவும் வியக்கத்தக்கதாயிருக்கிறது. நூர்ஜிஹான் அநேகம் பிள்ளைகள் பெற்றாள். கடைசியில் பிரசவவேதனைப்பட்டுக்கொண்டிருக்கும்போது சிசு கீழே விழுவதற்குமுன்னமே அதன் குரல்கேட்டதுகண்டு, உடனே புருஷனை வரவழைத்து, கணவனே! கர்ப்பத்திலிருந்து சிசுவின் சத்தத்தைக் கேட்போர் பிழைக்கிறதில்லையென்று பெரியோர்வசனம் உண்டு. அப்படியே நான் கேட்டேனாகையால் நான் சீக்கிரத்தில் இறந்துபோவேன்; நான் இரண்டுவிண்ணப்பம் செய்கிறேன்; அதைத் தப்பாமல் நிறைவேற்றுவதாக வாக்குக்கொடுக்கவேண்டுமென்று கேட்க, அவனும் அவசியம் ஆகட்டுமென்று அங்கீகரித்தான். அப்போது அவள், நான் மரித்தபிறகு நீர் விவாகம்பண்ணிக்கொள்ளக்கூடாது; என் பேர் எந்நாளும் இவ்வுலகத்தில் நிலைநிற்கும்பொருட்டு ஒரு கோரி கட்டிவைக்கவேண்டும் என்ற இவ்விரு விண்ணப்பங்களைப் பண்ணினாள். அவள் காலஞ்சென்றபின் ஷாஜிஹான் தான் வாக்குக்கொடுத்தபடி இரண்டையும் நிறைவேற்றினான்.

ஆக்ராபட்டணத்தில் யமுனையாற்றங் கரையோரத்தில் ஒரு சிங்காரத்தோட்டத்தின் நடுவிலே வெகு அழகாகிய கோரியொன்றை

ஷாஜிஹான் நூர்ஜிஹானுடைய அபீஷ்டப்படி கட்டிமுடித்தான். அது வெகு விசித்திரமான வேலைப்பாடுகளுள்ளது. வெகு நேர்த்தியான சலவைக்கற்களாலும் நவமணிகளாலும் விசித்திரமாய்ச் சித்திரித்து, அநேக கும்மட்டங்கள் கட்டி வெகு விநோதமாயிருக்கிறது. அதைக் கட்டிமுடிக்க இருபதுவருஷகாலஞ்சென்றது, கோலகொண்டா, இலங்கை, காபூல் முதலிய பலவிடங்களிலிருந்து உயர்ந்த ரத்னங்கள் அழைப்பித்ததுமல்லாமல் இத்தாலியாவிலிருந்து வெகு திறமையுள்ள வேலைக்காரர்களும் வந்து வேலைசெய்தார்கள். அந்த அற்புதமான கோரிக்குத்தான் தாஜ்மஹால் என்று பெயர். அந்த விநோதமான காட்சியை நாளைக்கும் பிரத்தியட்சமாய்க் காணலாம். அதைப் பார்க்கவேண்டுமென்றே அநேகர் அவ்விடம் போய்வருகிறார்கள். குறைகுற்றமின்றி அவ்வளவு அழகான கட்டடம் வேறெங்கும் கிடையாதென்று தைரியமாய்ச் சொல்லலாம். அதற்குக் குறைவு ஏதேனும் உண்டானால், அது என்னவெனில், அதை மூடும்படியாகக் கண்ணாடிமூடி இல்லையேயென்பது ஒன்றுமாத்திரமே.

---

## செடிகளும் செடிகள் பரவும் விதமும்.

மனிதன்முதலான ஜந்துக்களுக்கு ஆகாரமாக உபயோகப்படும்பொருட்டாகவே புல்பூண்டுகள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனவென்று தோன்றுகிறது. அவைகள் எங்கும் விசேஷமாகக் கிடக்குமாயின், ஜந்துக்களுக்கு ஆகாரத்திற்குக் குறைவில்லை. மேன்மேலும் விஸ்தரித்துப் படரும் குணம் செடிகளுக்கு உண்டு. சிலநாளிருந்து பட்டுப்போகும் செடிகளானாலுஞ் சரி, வெகுநாள் நீடித்திருக்கும் செடிகளானாலுஞ்சரி, அவைகளினின்று இலை, காய், பூமுதலியன உண்டாவது பக்கத்தில் மற்றொரு செடியை உற்பத்தியாக்குவதற்கென்றே தோன்றுகிறது. செடிகள் வளரும்விதம் ஒன்றன்று; பல உண்டு. சிலவற்றினின்று விதைகள் உண்டாகின்றன; சில வேரிலிருந்து நரம்புபோன்ற காம்புகள் விடுகின்றன; சில கீழ்நோக்கிக் கிளைகள்விட்டு, அக்கிளைகளினின்றும் பூமியில் வேர் ஊன்றுகின்றன; உதிர்ந்துபோன இலைகளும், செடியிலிருந்து வெட்டப்படும் துண்டுகளும் வேர்விட்டு முளைக்கும்படியாகச் செய்யலாம்.

செடிகளின் விதைகள் வளரும் பருவத்தை அடைவதற்குமுன் எளிதில் சேதப்படாமலிருக்கும்படியாக மிகவும் பத்திரமாய்க் காப்பாற்றப்படு

கின்றன. இலந்தையின் விதை எவ்வளவு ஜாக்கிரதையாய் பழத்தின் நடுவில் அமைக்கப்பட்டு ரசந்தங்கிய பருத்த சதையினால் மூடப்பட்டிருக்கிறது! மாம்பழத்தின் கொட்டை அதற்குள்ளிருக்கும் விதையை சூரியனுடைய வெப்பத்தினின்றும், மழையினுடைய குளிர்ச்சியினின்றும் காக்கிறது. இப்படியே சகலவிதமான விதைகளும் தீங்குநேரிடாதபடிக்கு அடக்கம்பண்ணப்பட்டிருக்கின்றன.

கெட்டியான மூடியில்லாத விதைகளுக்கு வலிமையான தோலாவதிருக்கும். எகிப்துதேசத்துக் கோபுரங்களில் பிணத்தோடு பிணமாகக் கிடக்கும் கோதுமை (தானிய விதைகளும்) மணிகளும் முளைக்கத் தலைப்படுகின்றன. தேங்காயின் கொட்டை நாரினாலும், அதன்மேல் பலமான தோலினாலும் மூடப்பட்டிருக்கிறது. இந்த நாரினாலாகிய மூடிக்குள் மிகவும் கெட்டியான ஓடு இருக்கிறது. ஆகிலும் தேங்காய் மிகவும் லேசானபடியால் சமுத்திரத்தில் ஒரு தீவிலிருந்து மற்றொரு தீவுக்கு மிதந்துகொண்டுபோய், எங்கே தகுந்த இடம் அகப்படுகிறதோ அங்கே முளைக்கிறது. கீரையின் விதைகள் காற்றில் அடித்துக்கொண்டுபோய் நாலாபக்கத்திலும் தூவப்படுகின்றன. சமுத்திரத்துப் புற்களின் விதை தண்ணீரில் கரையாத ஓர் வித அரக்கினால் மூடப்பட்டிருக்கிறபடியால், ஜலத்தில் மிதக்கும்போது எது தட்டுப்படுகிறதோ அதைப் பிடித்துக்கொள்ளுகிறது.

உருளைக்கிழங்குகள் விதையினின்று உண்டாவதுமல்லாமல் வேரினின்றும் உண்டாவதுண்டு. புல் நான்குபக்கத்திலும் தரையின்கீழ் கொடிவிட்டுப் படருகிறது; மற்றச் செடிகளைப்போல புல்லை தனித்தனியாகப் பிடுங்கக்கூடாது. ஆஸ்திரேலியாமுதலியவிடங்களில் இருக்கும் புல் இத்தன்மையதன்று. புல்லைப்போல வேரூன்றுவதற்குத் தகுந்த களிப்பான இடத்தைச் சேருகிறவரைக்கும் கொடிவிட்டுப் படரும் பழஜாதிகளும் சில உண்டு.

சில மரங்களும் செடிகளும் பதிபோட்டு வேரூன்றி புதுமரங்களும் செடிகளுமாகின்றன. கஸ்தூரிப்பட்டை ரோஜாமுதலானவை இந்த ஜாதியைச் சேர்ந்தவைகள். ஆலமரமானது நேராய் நாலாபக்கத்திலும் அதிக பெரிதான கிளைகள் விடுகின்றன; அக்கிளைகள் விழுதுவிட, அவ்விழுதுகள் பூமியிலிறங்கி வேரூன்றிப் புதுமரங்களாகின்றன. இவ்விதமாக ஒரு மரமே காடுபோற் பரவி வளர்கிறதுமுண்டு. (Mangrove) மாங்குரூவ் என்னும் மரமும் இப்படிப்பட்டதே. அது உஷ்ணதேசங்களில் நதிக்கரைகளிலிருக்கிற சேறில் பயிராகி, வேறு வேறாகக் கிளைகள்விட்டுப் பூமியிலூன்றி நிலைத்து, அநேக நாழிகை வழிதூரமட்டும் பரவிச் செல்கின்றது. அந்நதிகளில் ஓடமேறிச் சென்று அதைப் பார்த்தலிலுண்டான களிப்பு கண்ணுக்கு வேறொன்றிலுமிராது. கிளைகள் ஓரிடத்தில் சேறுக்குள் புதைந்து மற்றோரிடத்தில் உயர எழும்பி பின்னும் ஆற்றுநீரில் மூழ்கி

களை அடைகின்றது. மேற்சொன்ன அசைவு போஜனத்தை ஜீர்ணநீரோடு கலப்பதுமன்றி, அது பாகானபிறகு இரைப்பையின் எந்தப்பக்கத்தில் குடலுக்கு வழியிருக்கிறதோ அங்கே கொண்டுபோய்த் தள்ளுகிறது. (கு) சென்றமாதச் சஞ்சிகையில் 165—பக்கத்தில் உள்ள படத்தை மறுபடிபார்த்து அன்னப்பாகு குடலுக்குச் செல்லும்வழியாகிய அன்னக்குழலின் அடியைக் கண்டுகொள்க.

ஜீர்ணமாவதற்குமுன் ஆகாரம் குடலுக்குள்ளே செல்லுவதாயிருந்தால் வெகு சங்கடமுண்டாகும். இது உண்டாகாமலிருக்கும்பொருட்டு குடலின் த்வாரத்தண்டை (கு) மூடி அல்லது வாசற்காப்பான் ஒன்றுண்டு; அதன் காரியம் என்னவென்றால், ஜீர்ணமான பதார்த்தங்களைக் குடலுக்குப் போகவிட்டு, அப்படி ஆகாதவைகளை மறுபடி இரைப்பைக்கே திருப்பிவிடுகின்றது. இந்த விசித்திரமான சக்தியை சிருஷ்டிகர்த்தாவாகிய கடவுள் அதற்கு அமைத்திருக்கிறார்.

அந்தந்தச் சரியான்காலங்களில் தானாய்த் திறக்கவும் மூடிக்கொள்ளவும், உள்ளே போகவேண்டியவர்களை உள்ளேவிட்டு, வெளியிலே தள்ளவேண்டியவர்களைத் தள்ளவும் சக்தியுள்ள ஒரு கதவை ஒரு தச்சன் செய்வானாகில் அவன் மிக்கச்சமர்த்தனென்று நாம் மெச்சிக்கொள்வோமல்லவா? அத்தன்மையாகக் கதவைப் போலவே இந்த மூடியும் வெகு விசித்திரமாய் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மூடி மிருதுவான அன்னப்பாகைக் குடலுக்குள் செலுத்தி மற்றதை இரைப்பையில் தள்ளாமற்போனால், சாப்பிட்டவுடன் ஒரு யாமகாலம்வரைக்கும் நமக்கு வெகு உபத்திரவம் உண்டாகும்; மரணம் நேர்ந்தாலும் நேரும்.

இப்படியிருக்க ஜீர்ணமாகமாட்டாத பதார்த்தங்களை நாம் புசிப்போமானால் வியாதியுண்டாகும்; ஏனெனில் அந்த விசித்திரமான மூடியானது நம்பிக்கையுள்ள வாசற்காப்பானாகக் கண்காணித்து ஜீர்ணமாகாததைப் பலதரம் இரைப்பைக்குள் தள்ளித்தள்ளிப்பார்த்துக் கடைசியில் தன்னாலும் சக்கியமில்லாவிட்டால் குடலுக்குள் விட்டுவிடும்; அப்போது நமக்கு இரைப்பையிலும் குடலிலும் வருத்தம் உண்டாகும்.

# வீண்பெருமையையும் திருப்தியையும் பற்றிய கதை.

(தொடர்ச்சி.)

அதினுந்தினுமாய்க் காலையில் எழுந்துபோன புருஷன் வருவான்வருவான் என்று வித்தாரா எதிர்பார்த்திருந்தாள்; வரவுமில்லை ஒன்றுமில்லை. ஆமட் என்பவன் ராஜஜோதிஷனாக நியமிக்கப்பட்டு அரசனுடைய மருமகனாய்விட்டானென்று ஊரில் மாத்திரம் சொல்லிக்கொண்டார்கள். அந்த வதந்தியைக்கேட்டபோது வித்தாராவுக்கு ஆறாத மனத்துயரமுண்டாயிற்று. தன்னுடைய புருஷன் ராஜஜோதிஷனுடைய ஸ்தானத்தில் இருக்கவேண்டுமென்பது அவளுடைய மனோரதம்; அது முற்றும் நிறைவேறிப்போயிற்று. ஆனால் தான் அப்படிப்பட்ட கணவனுடைய பெண்சாதியாக இருந்து ஊரிலுள்ள பெண்களைப்பார்க்கிலும் அதிக ஆடம்பரத்தோடு வாழவேண்டுமென்று எண்ணியிருந்த கோரிக்கையோ அடியோடே வேரற்றுப்போயிற்று. எப்படியெனில்: ஆமட் என்பவனுக்கு தன்னுடைய பெண்சாதியை, விசேஷமான நகைநட்டுகள் போடுவதினாலும், அநேக வேலைக்காரர்கள் அமைப்பதினாலும் மேன்மைப்படுத்தற்குரிய செல்வம்வந்தது மெய்தான்; ஆனால் அவன் முன்பெண்சாதியை விட்டுவிட்டு வேறு ஒருத்தியைக் கல்லியாணம் பண்ணிக்கொண்டான். எப்படி எப்படியோ எண்ணியிருந்த எண்ணங்களெல்லாம் போய், வித்தாராவுக்கு ஜீவனாம்சம் கிடைக்கிறதே அருமையாயிருந்தது. ஆமட் என்பவன் மகா அழகான புதியபெண்சாதியோடு கொஞ்சிக்குலாவி இன்பமாய் வாழுகிறானென்பதைக் கேட்கக்கேட்க, வித்தாராவினுடைய பெருந்துக்கம் மேன்மேலும் பெருகிற்று; ஆதலால் தன்னை ஏமாற்றிப்போட்ட அந்த ஆமட் என்பவனை எப்படியாவது நாசஞ்செய்து போடவேண்டுமென்று அவள் கருதத்தொடங்கினாள். பழிவாங்குகிறதற்குச் சித்தமாயிருந்த அந்தப் பெண்ணுக்குச் சீக்கிரத்தில்தானே அவளுடைய கருத்துக்கு இசைந்த ஒரு தருணமும் வாய்த்தது.

விஸ்டான்தேசத்து ராஜா பெர்ஷியாதேசத்து அரசனுக்கு நெருப்புபோன்ற பிரகாசமுள்ள ஒரு பெரிய மரகதமணியை இனாமாக அனுப்புவித்தான். அது மூன்றுசாவி போடத்தக்கின ஒரு பெட்டியில் வைத்து நம்பிக்கைக்குப் பாத்திரமான மூவர்களுடைய வசத்தில் ஒப்புவிக்கப்பட்டது. அவர்கள் இஸ்யஹான் நகரம்வந்து சேர்ந்தவுடன், பெட்டியைத் திறந்துபார்த்தார்கள்; மரகதமணியைக்காணோம். அவர்களுக்கு வயிற்றில் நெருப்பிட்டதுபோலாயிற்று; ஒவ்வொருவனும் மற்ற இருவர் மேல் பழிபோட்டான். பூட்டு உடைபடாதிருந்ததனால், அவர்களுக்குள்ளேயே யாராவது திருடியிருக்கவேண்டும். சங்கதியை முற்றும் ஒளித்துப்போட்டால் எல்லாருக்கும் அபாயம் சித்தமாய் நேரிடும்; ஆகையாலே என்னசெய்யவேண்டியதென்று யோஜனைபண்ணினதின்பேரில், அதுவிஷயத்தை அரசன்சமூகத்தில் விண்ணப்பம்பண்ணி அவருடைய விசேஷசக்தியினால் திருடனைக் கண்டுபிடித்து மற்ற இருவரையும் விட்டுவிடும்படி அவ்வரசனுடைய கனத்தை வேண்டிக்கொள்ளுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அந்தச் சங்கதியை அரசன்கேட்டு ஆச்சரியப்பட்டு, உண்மையைத் தெளிந்தறிய வழிதெரியாமல் திகைத்துநின்றான்; பிரதான மந்திரியையும் மற்றுமுள்ள சிறந்த யோக்கியதையுள்ளவர்களையும் அழைப்பித்துக் கேட்கும்போது அவர்களும்

யாதொரு யுக்தியும் சொல்லமாட்டாமலிருந்தார்கள். நகரமுழுவதும் அது பெரிய வதந்திக்கிடமாயிற்று. ஷித்தாரா என்பவள் அதைத் தெரிந்துகொண்டு தன் புருஷனைக்கெடுக்க நல்ல சமயம் வந்ததென்றெண்ணி ராஜசமூகத்தில் விசேஷமான ஓர் அறிக்கையிடவேண்டியிருக்கிறதென்று தன்னுடைய விக்கியாபனத்தை அரசன் சற்றுச் செவிசாத்தவேண்டுமென்று பிரார்த்தித்தாள். அந்தப் பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டது. ஷித்தாரா என்பவள் அரசனை நெருங்கினவுடன் அவன் காலில்வீழ்ந்து ஓ மகாப்பிரபுவே, என் புருஷனாயிருந்து இப்போது தங்கள் மருமகனாயிருக்கிற ஆமட் என்பவனுடைய கொடியகுணத்தை இதுவரையில் வெளிப்படுத்தாமலிருந்தேன்; என்னை மன்னிக்கவேண்டும். அவன் திருடர்களில் சேர்ந்தவன்; கெட்டுப்போன சொத்தைக் கண்டுபிடித்ததும் அதனாலேதான். ஜோதிஷன் ஜோதிஷன் என்று வேஷம்போட்டுக்கொண்டுதிரிகிற அந்த மகா பாபிக்குத் தாங்கள் பெண்கொடுத்ததனால் ராஜவமிசத்துக்கு ஒரு பெருந்தோஷம் நேர்ந்திருக்கிறது. நான் சொல்லுவது உண்மையல்லவென்று தோன்றினால், ஆமட் என்பவனை இப்போது காணாமலிருக்கிற மரகதமணியைத் திருடினவன் யார் என்று சொல்லச்சொல்லுங்கள்; நாற்பது பெட்டிநகைகளைக் கண்டுபிடித்த ஜோதிஷனுக்கு ஒரு மரகதமணியைக் கண்டுபிடிப்பது எளிதானகாரியந்தானே என்றாள். மருமகன்மேல் மிகவும் ஆசைவைத்திருந்த அரசன் அந்த சமாசாரத்தைக்கேட்டு மிகவும் துக்கித்தான். ஆகிலும் ராஜவமிசத்துக்குக் குறைச்சல் வராமற் பார்த்துக்கொள்ளவேண்டியது ஆவசியகமாதலால், அரசன் ஆமட் என்பவனை அந்தப் பரீட்சைசெய்து ஜோதிஷவேஷக்காரனென்று கண்டால் உடனே சிரசாக்கினை செய்துவிடுகிறதென்று நிச்சயித்து அவனை வரவழைத்து நடந்த விருத்தாந்தத்தையும், தனது எண்ணத்தையும் தெரிவித்து, மரகதமணியைத் திருடினவன் இன்னானென்று அறிந்துசொல்ல இருபதுநாள் கெடுவுகொடுக்கிறேன்; அதற்குள்ளே அதைச் சரியாகச் சொல்லிவிட்டால் மகா மேலான கவருவம்பண்ணுவேன்; இல்லாவிட்டால் சிரசாக்கினைபண்ணிப்போடுவேன் என்றான்.

ஆமட் என்பவன் என்னசெய்வான் பாபம்! மூஞ்சைத் தொங்கப்போட்டுக் கொண்டு இருப்பிடம்போய்ச் சேர்ந்தான்; அவனுடைய முகம் தெளிவாயிராததை அறிந்து புதுப்பெண்சாதியாகிய அரசன் மகள் என்னசெய்தியென்று கேட்டாள். ஆமட் என்பவன் தெய்வபக்தியும் உண்மையுமுள்ளவனாகையால், தான் புத்தியறிந்ததுமுதல் என்னென்ன நடந்ததோ எல்லாவற்றையும் கள்ளங்கபடமில்லாமல் ஸவிஸ்தாரமாய்ச் சொல்லிப்போட்டுக் கடைசியில் நான் சொன்ன சங்கதிகளினால் இப்போது உன் தகப்பன் இட்டிருக்கிற காரியத்தைச் செய்ய என்னாலாகாதென்று கண்டுகொள்ளலாம்; பிராணனை இழந்துபோகவேண்டியதேதவிர வேறேவழியில்லை; இருபதுநாள்வரைக்குந்தான் இந்த ஏழைப்புருஷன் உயிரோடிருப்பானென்று எண்ணிக்கொள்ளென்றான். அதுகேட்டு அவள் பிராணநாதா! உம்முடைய ஸத்தியத்தின்பொருட்டு நான் அதிகமாய் நேசிக்கிறேன்; இத்தனைநாளாய் சுவாமியினுடைய அனுக்கிரகத்தினால் ஜயம்பெற்றுவந்த உம்மைத் தெய்வபக்தியுள்ளவரானால் யார்தான் நேசிக்காமலிருப்பார்? நான் இந்தத்தடவை ஜோதிஷனாகித் திருடனைக் கண்டுபிடிக்கிறேன். நீர்மாத்திரம் மனக்கலக்கமில்லாமல் சுவாமிக்குத் துதிசெலுத்திவாருமென்று தைரியம்சொல்லிவிட்டு ஷிஸ்ட்டான்தேசத்திலிருந்து வந்திருந்த மூன்றுபேர்களையும் தன்னுடைய அரண்மனைக்கு வரவ

ழைத்து, நீங்கள் ஒரு பெரிய அரசனிடத்திலிருந்து வந்தவர்கள்; ஆகையால் உங்களுக்கு வேண்டிய உபசாரம்பண்ணவேண்டும்; மரகதமணியைக் காணோமேயென்று நீங்கள் சிந்திக்கத்தேவையில்லை; அது போனால் போகிறது. தெய்வச்செயலுக்கு யார்தான் என்னபண்ணலாம்; நான் என்னுடைய தகப்பனோடுசொல்லி அதைப்பற்றிக் கவலைப்படாமலிருக்கும்படி செய்கிறேன் என்றுசொல்லி அவர்களை சிலநாள் தன் அரண்மனையிலேயே தங்கியிருக்கச்சொல்லி விருந்துமுதலிய பண்ணுவித்தாள். நாளாவர்த்தியில் அவர்களுக்கும் மரகதமணியைப்பற்றிய விஷயம் மறந்துபோயிற்று; இனி பயமில்லையென்று எண்ணிக்கொண்டு அந்த ராஜகுமாரத்தியோடு வேடிக்கையாய்ப் பேசுவதும் க்ஷேமங்களை விசாரிப்பதுமாயிருந்தார்கள். இப்படியிருக்கும்போது ஒருநாள் சாயங்காலம் அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இனிப்பான கதைசொல்ல, ராஜகுமாரத்தி நானும் ஒன்று சொல்லுகிறேனென்று ஆரம்பித்தாள்.

என்னுடைய தகப்பனாருக்கு நான் ஒரேகுழந்தையாதலால், நான் மிகவும் செல்வமாய் வளர்க்கப்பட்டேன். இந்தப் பூமியில் நமக்குச் சாயாதகாரியமொன்றுமில்லை என்ற எண்ணம் பிறந்தது; எல்லாக்குணங்களிலும் தாராளகுணமே சிறந்ததென்று அந்தவிஷயத்தில் யாவரையும் மிஞ்சவேண்டுமென்றெண்ணியிருந்தேன். என்னுடைய மனது எப்படியிருந்ததோ அப்படியே என்னுடைய சக்தியுமிருக்குமென்று நம்பியிருந்தேன். யார் எந்தவிதத்தில் எவ்வளவு அவஸ்தைப்பட்டாலும் அந்த அவஸ்தையைப் போக்கடிக்க என்னால் மாளுமென்ற கொழுப்பு பூரணமாயிருந்தது. பதினெட்டாம் வயதில் மனத்தேர்ச்சியும் மிக்க அழகுமுள்ள என் மாமன் மகனை மணம்புரிந்தேன்; என்னைவிட பாக்கியசாலி ஒருவருமில்லையென்றெண்ணிக்கொண்டேன். விஷேகமுகூர்த்தம் வைத்திருந்த தினம் காலமே தோட்டத்திற்குப்போய் உலாத்திவரலாமென்று போனேன்; போனவிடத்தில் தோட்டக்காரனுடைய முகம் வாடி வதங்கியிருந்ததுகண்டு என்ன சங்கதியென்று கேட்டதின்பேரில், அவன் அதற்குத் தகுந்த பதில் சொல்லவில்லை. நான் பிறகு விசனத்தின் காரணத்தைச் சொல்லு; அதை நான் நிவர்த்திக்கிறேனென்றுசொல்லி மறுபடியும் கேட்டேன். அவன் அம்மா! என்னுடைய மனதில் நிகழும் கருத்தை நிறைவேற்றி என்னை ஆனந்தப்படுத்த உங்களால் ஆகாதென்றான். எனவே, எனக்கு ஆக்கிரகம் பிறந்து உன்னுடைய துயரத்தை ஆற்ற எதைவேணுமானாலும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்; நீ உன் துயரத்தின் காரணத்தைச் சொல்லுகிறபரியந்தம் இந்த இடத்தைவிட்டு நான் விலகுகிறதில்லையென்று சபதங்கூற, அந்தத் தோட்டக்காரன், அம்மா! நான் இங்கே வேலைசெய்துவந்த இரண்டுவருஷகாலமாய் உங்களைப் பார்த்துப்பார்த்து என் ஆசைமிகவும் பெருகியிருக்கிறது; இன்றிரவு இந்தத் தோட்டத்தில் நீங்கள் வந்து என்னோடுகூடச் சம்மதியாவிடின் நான் அதிருப்தனாய்ச் சாகவேண்டுமென்றான். இப்படி அவன் சொன்னதைக் கேட்டு நடுங்கி சபதங்கொடுத்துவிட்டோமேயென்ற பயத்தினால் எனக்குள்ள திரவியத்தையெல்லாங்கொடுக்கிறதாகச் சொல்லி அவனைச் சமாதானம்பண்ணப்பார்த்தேன். அவன் அம்மா! நான் முன்னேயே சொல்லிப்போட்டேனே; முன்பின் யோசியாமல் சபதங்கூறினபடியாலல்லவோ என்னுடைய உட்கருத்து வெளிக்குவந்தது. என்னுடைய கதி மரணந்தான்; ஏனெனில் நீங்கள் மற்ற யாருக்காகிலும் பெண்சாதியாயிருக்கிறதைப்பார்க்க எனக்கு மனதில்லை.

நான் செத்துப்போகிறேன்; எப்படியும் நீங்கள் உங்களுடைய புருஷனிடத்திற்போய் சுகமாய் வாழ்ந்திருங்கள்; ஆனால் இனி நீங்கள் எல்லாம் வல்லோம் என்ற ஆணவங்கொண்டு முரட்டுத்தனமாய் வாக்குக்கொடுக்கக்கூடாதென்றான். இப்படி அவன் சொன்னதற்கு என்ன அருத்தம்? நான் பிராணனைவிட்டாலும் விடுவேனேயல்லாமல் நான் அவனைக் கலியாணம்பண்ணிக்கொள்ள உடன்படுவனோ? ஆனால் நான் கொடுத்த சபதத்தை நிறைவேற்றாமற்போனால் சுவாமியினிடத்தில் அபசாரப்படவேண்டுமல்லவா? என்னை அடுத்தவர்கள் யாருக்கும் எவ்விததுன்பமும் வராமற்காத்துச் சாகவேண்டுமென்பது என்னுடைய பூர்ணமான உள்ளுறை. அப்படியும் செய்யத்துணியாமல் இப்படியும் செய்யத்துணியாமல் சற்று மயங்கிநின்று கடைசியில் தோட்டக்காரனோடு உன்னிஷ்டப்படியே ராத்திரி இவ்விடம் வருகிறேனென்று சொல்லிப்போட்டு அந்த வாக்கு பூர்த்தியானதட்சணம் பிராணனைவிட்டு வருகிறதென்று தீர்மானித்து வீடுவந்துசேர்ந்தேன். பகலெல்லாம் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்து, ராத்திரி வேலைக்காரர்களையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு, அழகாய்ச் சிங்காரித்துக்கொண்டு தோட்டத்திற்குப்போகப் புறப்பட்டேன். நாலுமார்தூரம் போகையில் ஒரு திருடன் கிட்டவந்து நகைகளைக்கழற்றிக் கீழேவைக்கிறையா கொன்றுபோடவாவென, எனக்குச் சாவதற்குப் பிரியமிருந்தபோதிலும் சபதம் நிறைவேறவில்லையே என்ற விசனத்தாலே திருடனை வணங்கி நடந்தசங்கதியைச் சொல்லி, திரும்பிவரும்போது அவனிடத்தில் வருகிறதாக உறுதிகொடுத்து அவனிடத்தில் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு அப்புறம்போனேன். பின்னையுங்கொஞ்சதூரத்தில் ஒரு சிங்கம் வழிமடக்கிற்று; அதற்கும் அப்படியே சொல்லிவிட்டு என் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்த தோட்டக்காரனிடஞ்சென்றேன். சென்றமாத்திரத்திலேயே அவன்முகம் மலர்ந்தது; அப்போது நான் வழியில் திருடனையும் சிங்கத்தையும் பார்த்ததாகச்சொல்லி மறுபடியும் அங்கேயே போகும்படி வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறதாகவுஞ்சொன்னேன். அதைக்கேட்டு அவன் ஐயோ! நான் அவ்வளவு கொடும்பாவியா! என்னால் உங்களுக்கு அவ்வளவு துன்பம் உண்டாயிற்றே! நான் திருடனையும் சிங்கத்தையும் விடக் கொடியனா? இல்லை இல்லை. நீங்கள் எனக்குப்பண்ணின சபதத்தை நிறைவேற்றவேண்டியதில்லை. என்னுடைய துன்மார்க்கசிந்தையை மன்னிக்கவேண்டுமென்று வேண்டினான்; அந்த வார்த்தைகளினாலே களிப்புற்று அவன் எனக்குப் பத்திரமான இடந்தந்து ரட்சிக்கிறேனென்று சொன்னதையும் தடுத்துவிட்டு, சிங்கத்தண்டைவந்து தோட்டக்காரன் என்னுடைய சபதத்தை நீக்கிவிட்டான்! மிருகேந்திரனாகிய நீங்கள் அப்படியே மனசுபண்ணவேண்டுமென, அது வழிவிட்டது. அப்புறம் திருடனிடத்திற்போய் தோட்டக்காரனும் சிங்கமும் செய்ததைச் சொன்னேன்; அவன் நான் அற்பதோட்டக்காரனையும் இரைதேடுஞ்சிங்கத்தையும்விட அற்பனாவென்றுசொல்லி என்னைச் சும்மாவிட்டுவிட்டான். இப்படித் தப்பித்துக்கொண்டு அரண்மனைசேர்ந்து என்னுடைய புருஷனோடுகூட இனிப்பாயிருந்துகொண்டிருந்தேன்; என்னுடைய தௌர்பாக்கியத்தினால் புருஷன் சிலவருஷத்துக்குள் இறந்துபோய்விட்டார்.

ராஜகுமாரத்தி இவ்வளவுதூரம் கதைசொல்லிவந்து அம்மூவரும் வேறோர் ஞாபகமுமில்லாமல் அதைக் கேட்டு ஆச்சரியப்படுகிறது கண்டு, அவர்களில் ஒருவனைப்பார்த்து, தோட்டக்காரன், திருடன், சிங்கம் இம்மூவரில் யாருடைய தயவு சிறந்த

தென்று கேட்டாள். அதற்கு அவன் தோட்டக்காரன்தான் சந்தேகமென்ன; இட்டினபொருளை விட்டுவிட்ட அவனுடைய தயவேதயவு என்றான். மற்றொருவனைப் பார்த்து அவள், உமக்கென்ன தோன்றுகிறதென, அவன் பசியினால் வருத்தப்பட்டுக்கொண்டிருந்த சிங்கம் மகா நேர்த்தியான இரையை விட்டுவிடாதே; அதுவே சிறப்பு என்று தனக்குத் தோன்றியதைச் சொன்னான். இதற்குள்ளே மூன்றாவன் நீங்கள் சொல்லுகிறது பிசகு, திருடனுடைய மகிமையை மறந்துவிட்டீர்களே! பெருந்திரவியம் கிடைக்கிறதற்கிருக்க, அதை எடுத்துக்கொள்ளாமல் விட்டுவிட அவனுக்கு மனம்துணிந்ததே; அப்படி யார்தான்செய்வான் என்று தன்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்பதற்குமுன்னமே வெளியிட்டான். அப்போது ராஜகுமாரத்தி முதல்வனைப்பார்த்து, நீர் பெண்களின் சிறப்பைப் பாராட்டுகிறவன்; இரண்டாவனை நோக்கி, நீர் போஜனப்பிரியன்; மூன்றாவனைச்சுட்டி, நீ திருடன்; மரகதமணி உன்னிடத்திலிருக்கிறது; உன்னுடைய யோக்கியதையை நீயே வெளியிட்டாய்; குற்றத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் உன் பிராணனுக்குச் சேதம்வருமென்றனள். இதைக்கேட்டு, யானை தன்தலைமேல் தானே மண்ணைப்போட்டுக் கொள்ளுவதுபோல, நாமே நம்முடைய திருட்டுத்தனத்தை வெளியிட்டோமேயென்று துக்கித்து, அவள் காலில்வீழ்ந்து மரகதமணியைக் கொடுத்துவிட்டு மன்னிப்புகேட்டுக்கொண்டான். அதைக் கொண்டுபோய் புருஷனிடத்தில் கொடுத்துத் தன் தகப்பனிடத்திற் கொண்டுபோகச்சொன்னாள்.

அவனும் அப்படியே செய்ய, அரசன் அதைக்கண்டு மகிழ்ந்து விசேஷ மரியாதைகள்பண்ண எத்தனிக்கையில், வாஸ்தவமாய் தனக்கு அவ்வளவு தகாதென்று தெரிந்து அரசனைச் சாஷ்டாங்கமாகச் சேவித்து, தான் அதுவரையில் பண்ணினதெல்லாம் மோசமென்று சொல்லித் தன் கதையை ஆதியோடந்தமாகக் கூறினான். அரசன் அதைக்கேட்டு மந்திரிமுதலானோர்களை வரவழைத்துச் சபைகூட்டித் தன் பெண்ணைப் பக்கத்தில் நிறுத்திக்கொண்டு, என் கண்மணியே! நீ நற்குணமும் நல்லமனசும் உள்ளவளாகையாலே, உன்னிடத்தில் ராஜ்ஜியாதிகாரத்தை ஒப்புவித்துப்போடுகிறேன். உன் புருஷனுடைய செய்கைகள் வெளிப்பட்டன. பிறப்பால் அவன் தாழ்ந்தவனாகிலும் ஞானத்திலும் விவேகத்திலும் சிறந்தவனென்று எண்ணியிருந்தேன்; அதுவும் ஒன்றுமில்லையென்று தெரிந்தது. உனக்கிஷ்டமிருந்தால் அவனை வைத்துக்கொள்; இல்லாவிடின் தள்ளிப்போடு என்றான். அதற்கு அவள் தகப்பன் கையை முத்தமிட்டு, அன்புள்ள தகப்பனே! ஒன்றுந்தெரியாத என்னிடத்தில் ராஜ்ஜியத்தை ஒப்புவிப்பது யுக்தமன்று; நீரே இன்னும் சிலநாளைக்கு ஆண்டுவரவேணும். என் புருஷனைப்போல உண்மையானவனும் தெய்வபக்தியுள்ளவனும் ஒருவனுமில்லையாதலால், எனக்கு அவரிடத்தில் மெத்தவும் அன்பு இருக்கிறது என்றாள். அரசனும் அவளிஷ்டப்படி நடக்க ஒத்துக்கொண்டான். ஆமட் என்பவன் பிரதானமந்திரியாக நியமிக்கப்பட்டு கண்ணியனென்று பெயர்பெற்று சுகமாய் வாழ்ந்திருந்தான்.

லீத்தாராவினுடைய கொடியஎண்ணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன; ஆகிலும் அவள் மன்னிக்கப்பட்டாள். ஜீவனாம்சம் கொஞ்சம் கொடுக்கப்பட்டது. சாகிறபரியந்தம் அதிர்ப்தியுள்ளவளாய் இருந்து பிராணனைவிட்டாள். வீணாசைப்பட்டதனாலல்லவோ உள்ளதும்போய் இந்தத் துக்ககரமான கதிநேர்ந்ததுபாருங்கள்.

# தசகுமார சரிதம்.

நான்காவது:

## புஷ்போத்ப்வன் கதை.

இதுவரையில் குமாரர்கள் அவதரித்ததும், அவர்கள் திக்விஜயம்பண்ணும்படி யாத்திரை புறப்பட்டதும், நடுவழியில் ராஜகுமாரன் ஒரு பிராமணனுக்குத் துணைசெய்வதற்காகத் தன் தோழர்களை வஞ்சித்துவிட்டுப்போனதும், மறுபடி அவன் தான் போன காரியத்தை நிறைவேற்றிவிட்டுத் தோழர்களைப்பார்க்க வருகையில் இடையே ஒரு உத்தியானவனத்தில் ஸோமதத்தன் என்கிற தன் நேசனொருவனைக் கண்டு அவன் வரலாற்றைக்கேட்டுக் குதூஹலமாயிருக்கையில் புஷ்போத்பவன் என்கிற மற்றொரு தோழன் அங்கே வந்துசேர்ந்ததும் எழுதினோம். இப்போது ராஜகுமாரன் புஷ்போத்பவன் கதையைக் கேட்கவே அவன் சொல்லுகிறான்;

என்னுயிர்த்தோழனே! நாங்கள் அன்றையதினம் காலையில் எழுந்துபார்க்கையில் உன்னைக் காணாதபோதே நீ அந்தப் பிராமணனுக்குத் துணைசெய்யப்போனாயென்று எங்களுக்குத் தெரியும். ஆனால் நீ இன்னவிடத்திற்குப் போனாயென்று தெரியாமையால் உன்னைத் தேடும்படி புறப்பட்டோம். நானும் ஒருமூலை தேடிக்கொண்டுவருகையில் ஒருநாள் நடுப்பகலில் வெயில் பொறுக்கமாட்டாமல் ஒரு மலையடிவாரத்தில் ஒரு மரத்தினிழலில் உட்கார்ந்தேன். அங்கே என்பக்கத்தில் உருண்டையாய் ஒரு நிழலாடிற்று. இதென்னவென்று அண்ணாந்துபார்க்கையில் ஒருவர் ஆகாயத்திலிருந்து உருண்டுஉருண்டு விழுந்துகொண்டிருந்தார். நான் அதைப் பார்த்து யாரோ என்னவோ, என்ன சங்கடத்தால் விழுகிறாரோவென்று இரக்கமுற்றுக் கீழே விழவொட்டாமல் கையிலேந்திக் கொண்டு உடம்பு நோவாமல் மெதுவாய்க் கீழேவிட்டேன். அவர் அந்த விழுந்த வேகத்தால் மூர்ச்சைபோயினார். நான் அவர்க்குப் பலவிதமாய்ச் சிதோபசாரஞ்செய்யவே வெகுநேரங்கழித்துக் கொஞ்சம் பிரஞ்ஞை வந்தது. அவருடம்பு தெளிந்தபின்பு, அப்படி மலைமேலேறிக் கீழே விழுந்ததற்குக் காரணமென்னவென்று நான் கேட்டதற்கு அவர், அப்பா! நான் மகததேசத்தரசனான ராஜஹம்ஸனுடைய மந்திரியான பத்மோத்பவனுடைய மகன்; எனக்கு ரத்னோத்பவனென்று பெயர். நான் வர்த்தகத்தில் விருப்பங்கொண்டு காலயவனமென்கிற தீவிற்குப்போய் அங்கே ஒரு வர்த்தகன் பெண்ணை விவாஹஞ்செய்துகொண்டு அவளோடுகூடத் திரும்பி வருகையில் நடுக்கடலில் கப்பலுடைந்து யாவரும் மூழ்கிப்போனார்கள். நான்மாத்திரம் மெல்லமெல்லக் கரைவந்து சேர்ந்தேன். கரையேறியும், சரக்குகளையுமிழந்து மனையாளையும் பறிகொடுத்த துக்கத்தால், ஒன்றுந்தோன்றாமல் அல்லாடிக்கொண்டிருக்கையில்,

ஒரு முனிவர்வந்து இன்னும் பதினாறு வருஷத்தில் உனக்கு நல்ல காலம் வருமென்று சொன்னதனால் இதுவரையில் எதிர்பார்த்திருந்தேன். ஒரு நன்மையையும் காணேன்; எத்தனைநாளைக்கு இந்தத் துயரம் அனுபவிக்கிறதென்று இக்காரியஞ்செய்யத் துணிந்தேனென்றார். அவைகளைக் கேட்கவே இவர் என்னுடைய தந்தைதான் என்று தோன்றிற்று.

அத்தருணத்தில், 'அம்மா வேண்டாம், உன் பிள்ளையும் புருஷனும் துரிதத்தில் வந்து சேருவார்கள் என்று சோதிஷசாஸ்திரி சொல்லியிருக்க, நீ இப்போது தீக்குளிக்கத் துணிந்தது சரியல்ல, வேண்டாம்' என்று ஒரு பெண்கூச்சல்கேட்டது. அதுகேட்டு நான், ஐயனே! உம்மோடு விண்ணப்பஞ்செய்யவேண்டியவை அநேகமிருக்கின்றன. அவையெல்லாம் அப்புறம் ஆகட்டும்; இதோ யாரோ ஒரு பெண்பிள்ளை கூவுகிறாள். அதை நாம் உபேக்ஷித்தால் அநர்த்தம்விளையுமென்று தோன்றுகிறது. நான் போய்வருமளவும் ஒரு நிமிஷகாலம் இங்கேயே இருக்கக்கோருகிறேன் என்றுசொல்லி, என் தந்தையை அங்கேயே நிறுத்திவிட்டுப் போய்ப்பார்க்கையில், ஒருவள் பெருந்தீவளர்த்தி அதற்கு எதிரே கிழக்குமுகமாய்க் கை கூப்பி நின்றுகொண்டிருந்தாள். அவளையும் அவள் பக்கத்திலிருந்த கிழவியையும் அழைத்துக்கொண்டுவந்து என் பிதாமுன்விட்டு அம்மா! நீங்கள் எங்கிருக்கிறவர்கள்? இங்கெங்கே வந்தீர்கள்? என்றுகேட்டதற்கு, அந்தக்கிழவி, குழந்தாய்! இவள் காலயவனத்தீவிலிருக்கிற காலகுப்தனென்கிற வர்த்தகன் மகள்; சுவிர்த்தையென்கிற இவள், ரத்நோத்பவனைக் கலியாணஞ்செய்துகொண்டு பூர்ணகர்ப்பிணியாய்க் கப்பலேறிவருகையில் நடுவே கப்பல் முழுகிப்போகவே, நான் மெல்ல இவளை ஒரு கட்டைமேல் ஏற்றிக் கரைகொண்டு சேர்த்தேன். உடனே அங்கே ஒரு குழந்தையைப் பெற்றாள். என் துரதிர்ஷ்டத்தால் அந்தக் குழந்தையை ஒரு காட்டானை தூக்கிக் கொண்டுபோய்விட்டது. அதனால் சோகமடைந்து இவளும் நானுமாய் இக்காட்டிலேயே அல்லாடிக்கொண்டிருந்தோம்; இன்னும் பதினாறுவருஷம் கழித்தபின்பு உன் குழந்தையும் கணவனும் வந்து சேருவார்கள் என்று ஒரு யோகி சொல்லக்கேட்டு இவள் இத்தனை நாள் பிராணனை வைத்துக்கொண்டிருந்தாள்; அந்தக்கெடுவும் ஆய்விட்டது. இன்னும் ஒன்றையும் காணாமையால் அக்கினிப்பிரவேசம்பண்ணத் தீர்மானித்தாள் என்றாள். அதைக்கேட்டு நான் அவள் என்தாய்தான் என்று தெரிந்து அவளுக்கு சாஷ்டாங்கமாய் வந்தனம்பண்ணி, என் கதைகளெல்லாம் அவளுக்குச் சொல்லி, இவைகளையெல்லாம் கேட்டு மனமகிழ்ந்துகொண்டிருந்த என் தந்தையையும் காட்டினேன்; பின்பு அவர்கள் இருவரும் ஒருவர்க்கொருவர் முன் அடையாளங்களால் நம்பிக்கை உண்டாக்கிக்கொண்டு பரமாநந்தமடைந்து கண்ணீர்வழிய என்னைக் கட்டிக்கொண்டு உச்சிமோந்து ஒரு மரத்தினிழலில் உட்கார்ந்தார்கள். பின்பு என் தந்தையா

ணவர் நம்முடைய ராஜஹம்ஸ சக்கரவர்த்தியின் யோகக்ஷேமங்கள் எப்படிப்பட்டதென்று கேட்டதற்கு, நான் அவர் ராஜ்ஜியமிழந்து போனது, நாமெல்லாம் பிறந்து யாத்திரை புறப்பட்டதுமுதலான செய்திகளெல்லாம் சொல்லி அங்கே ஒரு முனிவர் ஆச்சிரமத்தில் அவர்களை நிறுத்திவிட்டு, உன்னைத் தேடவேண்டுமென்று அபிலாஷைகொண்டு, எந்தக்காரியமானாலும் பணமில்லாமல் முடியாதேயென்று அதற்காக அநேகம் சிஷர்களைச்சேர்த்து நமக்குத் தெரிந்தவித்தையால் விந்தியமலைக்காட்டில் அநேகம் நிதியிருப்பதைக்கண்டு 'அவைகளையெல்லாம் வெட்டியெடுத்து அதனருகே வந்திறங்கியிருந்த வர்த்தகரண்டை அநேகம் எருதுகளும் கோணிகளும் வாங்கி அவைகளில் அந்தப் பொருள்களையெல்லாம் ஏற்றிக்கொண்டு அயலான் பொருளென்று சாக்கிட்டு மெல்லக் கூடாரம் கொண்டுசேர்த்து அங்கிருந்த சந்திரபாலனென்கிற வர்த்தகனை நேசித்துக்கொண்டு அவனுடன் என் தாய்தந்தையர்களும் நானுமாய் உஜ்ஜயினீ பட்டணம்போய்ச் சேர்ந்தோம். அங்கே சந்திரபாலன் தகப்பனான பந்துபாலனென்பவனுடைய ஸகாயத்தால் அத்தேசத் தரசனைக்கண்டு அவனுடைய தயவால் அப்பட்டணத்திலேயே நிலையூன்றியிருந்தேன். பின்பு ஒருநாள் உன்னைத் தேடவேண்டுமென்று புறப்படுகையில், எனக்குப் பிராணசிநேகிதனான பந்துபாலன் கண்டு, அப்பா! நீயேன் இப்போது அல்லாடுகிறாய்? எந்தமூலையென்று தேடுகிறது? நான் ஸமயம்பார்த்துச் சொல்லுகிறேன்; அப்போ போகலாமென்றான். அப்படியே நான் நமக்கு நல்லகாலம்வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில், அங்கே ஒரு வணிகன்வீட்டில் மிகவும் ரூபவதியான பாலசந்திரிகை என்கிற பெண்ணைக் கண்டு, அவளைக் கலியாணஞ்செய்துகொள்ளவேண்டுமென்கிற அபிலாஷையுண்டாயிற்று. அவளுடைய நடவடிக்கைகளால் அவளுக்கும் என்மேல் ஆசையிருப்பதாய்த்தெரிந்தது. ஒருநாள் என் தோழனான பந்துபாலன், உன் வரவைப்பற்றிச் சகுனம்பார்ப்பதற்காக என்னையும் அழைத்துக்கொண்டு ஊருக்குவெளியில் ஒரு தோட்டத்திற்குப்போய்ச் சகுனம்பார்த்துக்கொண்டிருக்கையில் நான் அந்தச் சிங்காரத்தோட்டத்தின் அழகைச் சுற்றிப்பார்த்துக்கொண்டிருந்தேன். அங்கே ஒரு குளக்கரையில் என்மேல் ஆசைகொண்ட பாலசந்திரிகை மனங்கலங்கி முகம்வாடி நின்றுகொண்டிருந்தாள். அதுகண்டு, நான் அவளண்டைபோய் அம்மா! நீ ஏன் விசனப்படுகிறாயென்று கேட்டதற்கு, அவள், மூன்றாம்பேர் ஒருவரும் இல்லாமையால் வெட்கத்தைவிட்டுச் சொன்னதாவது: இந்த மாளவதேசத் தரசனான மானஸாரன் தனக்குக் கிழத்தனம்வந்ததனால், தர்ப்பஸாரனென்கிற தன் பிள்ளைக்குப் பட்டங்கட்டுவித்தான். அந்த தர்ப்பஸாரன் ஏகச்சத்திரமாய்த் தானே பூமிமுழுதும் ஆளவேண்டுமென்றுகருதி, தன் அத்தைபிள்ளைகளான சண்டவர்மா, தாருவர்மா என்கிற இருவரையும் ராஜகாரியங்களைப் பார்த்துக்கொள்ளும்படி சொ

ல்விட்டு இமையமலையில் தவஞ்செய்யப்போயினான். சண்டவர்மா ராஜ்ஜியத்தைக் காத்துவருகிறான்; அவன் தம்பியான தாருவர்மா அடங்காப்பிடாரியாய் அயலான் பெண்டுகளைப் பிடிப்பதே தொழிலாய்த் திரிகிறான். அவன், உன்னிடத்திலேயே மனம்புதைந்திருக்கிற என்னைப் பிடித்திழுக்கவந்தான்; அதனாலேதான் நான் துயரப்படுகிறேன் என்று கண்ணுங்கண்ணீருமாய்க் கதறக்கேட்டு நான் அவளைக் கொஞ்சம் சமாதானம்பண்ணி, அவனைக் கொல்லும்படி எளிதாய் ஒரு வழிகண்டுபிடித்து அவளுக்குச் சொன்னேன். பெண்ணே! அவனை விநோதமாய் வெல்ல வழியொன்றுண்டு. அதென்னவெனில், பாலசந்திரிகையை துஷ்டதேவதையொன்று பிடித்திருக்கிறது; ஏகாந்தத்தில் அவள் தன் தோழியுடன் வந்திருக்கும்போது எவன் அந்த தேவதையைக்கொன்று அவளைச் சந்தோஷப்படுத்துகிறானோ அவன்தான் அவளை விவாகஞ்செய்துகொள்ள வேண்டுமென்று ஒரு முனிவர் சொன்னதாய்ப் பட்டணமெங்கும் பிரசித்தப்படுத்திவிடவேண்டும். இந்தக் கூச்சலைக்கேட்டு அந்த தாருவர்மா பயந்து சும்மாவிருந்துவிட்டால் உன் இஷ்டம் கைகூடிப்போகிறது; அப்படியன்றி அதற்கும் துணிந்துவருவானாயின், அப்போது உன் தகப்பன்முதலியவர்கள் அப்பா! நீ இந்தக் கொடியகாரியம் எங்கள் வீட்டிற்செய்வது நலமன்று; பட்டணத்துஜனங்களெல்லாம் பார்த்திருக்க, தோழியுடன் இந்தப் பாலசந்திரிகையை உன் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோய்ப் பிழைத்துவருவாயாகில் சுகமாய் அவளைக் கலியாணஞ்செய்துகொள்ளலாம் என்று சொல்லவேண்டும். அதற்கும் அவன் உடன்பட்டால், நான் உனக்குத் தோழியாய் வேஷம்போட்டுக்கொண்டுவந்து அவனைக் குத்திக்குமுக்கிப் பிராணனை வாங்கிவிட்டு அப்படியே உன்னோடுகூடத் திரும்பிவந்துவிடுகிறேன். முதலில் நீ இப்போது வீட்டுக்குப்போனதும் உன் தாய்தந்தையர்களுடன் நம்மிருவர்க்குமிருக்கிற மனோபாவத்தை அறிவித்து உன்னை எனக்கே கலியாணம் பண்ணிக்கொடுக்கும்படிகேள்; அதை அவர்கள் அங்கீகரிக்க யாதொரு ஆக்ஷேபமுமில்லை. பின்பு தாருவர்மாவைக் கொல்லுவதற்கு நான் சொன்ன உபாயத்தைச் சரியாய் நடத்தவேண்டுமென்று சொல்லவே, அவள் அப்படியே ஆகட்டுமென்று ஸந்தோஷமாய் வீட்டுக்குச்சென்றாள். நானும் அந்தத் தோட்டம் முழுதும் சுற்றி வேடிக்கைபார்த்துவிட்டு பந்துபாலனண்டைவந்தேன். அவன், இன்னும் முப்பதுநாளில் உன்னுடைய ஸமாகமம் நேருமென்றான். அதைக்கேட்டு சந்தோஷப்பட்டு நாங்களிருவரும் வீடுவந்துசேர்ந்தோம். உடனே பாலசந்திரிகை, என் மாயையிற்சிக்கிக்கொண்ட தாருவர்மாவினுடைய வீட்டுக்குப் போகப்போகிறதாய்ச் செய்திசொல்லி அனுப்பினாள். அந்தப்படியே நான் பெண்களுக்கு வேண்டிய அலங்காரங்களெல்லாம் செய்துகொண்டு பாலசந்திரிகையுடன் அரண்மனைவாயிலில் போய் நின்று நாங்கள் வந்திருப்பதைத் தாருவர்மாவுக்குத் தெரி

யப்படுத்தும்படி வாயிலோனையனுப்ப, அவன் அதிவேகமாய் எதிர்கொண்டுவந்து, அந்த விநோதக்காட்சியைக்காணவந்தவர்களையெல்லாம் அங்கேயே நிறுத்திவிட்டு, எங்களிருவரைமாத்திரம் உள்ளே அழைத்துக்கொண்டுபோயினான். இன்றையதினம் தாருவர்மா ஒரு யக்ஷதேவதையைக் கொல்லப்போகிறானென்றுசொல்லித் தெருவில் மூச்சுவிட இடமில்லாமல் கூட்டம் கூடிப்போயிற்று. விவேகமேயில்லாத தாருவர்மாவானவன் எங்களிருவரையும் தன் படுக்கையறைக்கு இட்டுக்கொண்டுபோய் ஹம்ஸதூலிகாமஞ்சத்திலுட்காரவைத்து, அவ்விடம் கொஞ்சமிருண்டிருந்ததனால் என்னையும் பெண்ணாகவே பாவித்து, எங்களிருவர்க்கும் விசித்திரமான ஆடையாபரணங்களும் பலவகை வாஸனைத்திரவியங்களும் கொடுத்து, கொஞ்சநேரம் விநோதமாய்ப் பேசிக்கொண்டிருந்து கடைசியில் மதிகெட்டு அவள் கையைப் பிடிக்கவந்தான். அதுகண்டு நான் கோபித்து அவனைப் படுக்கையிலிருந்து கீழேதள்ளிக் கையாலும் காலாலும் நசுக்கிக்கொன்று முன்போலவே படுக்கைமேல்விட்டுக் கலைந்திருந்த, அலங்காரங்களையெல்லாம் சீர்ப்படுத்தி நடுவீட்டில்வந்து, ஓகோ! பாலசந்திரிகையைப் பிடித்திருக்கிற தேவதை இதோ கோரவடிவெடுத்துவந்து தாருவர்மாவைக்கொல்லுகிறது,வந்துபாருங்கள் என்று பெருங்கூச்சலிட்டுக் கதறவே, வாசலில் கூட்டங்கூடியிருந்தவர்களெல்லாம்சிலர் கோவென்று அழுதுகொண்டும்சிலர் ஆ! ஆ! என்று அதட்டிக்கொண்டும், சிலர் பாலசந்திரிகையை பலமான தேவதை பிடித்திருக்கிறதென்று தெரிந்தும் புத்திகெட்டு இப்படிப் பட்ட வேலைசெய்தான், அதன் பலனை இப்போது அனுபவிக்கிறான்; அதற்கு யாரென்னசெய்யலாம் என்று தேறுதல் சொல்லிக்கொண்டும்வந்து பெருங்கூட்டங் கூடிப்போயிற்று; யாவரும் அப்படி உல்லோலகல்லோலமாயிருக்கையில் மெதுவாய் நழுவி நாங்களிருவரும் வீட்டுக்கு வந்துவிட்டோம். பின்பு சிலநாள்கழித்து அப்படியே நான் பட்டணத்து ஜனங்களெல்லாம் பார்த்திருக்க அவளை மணம்புரிந்துகொண்டேன். இன்றையதினம் நீ வருவாய் என்று முன்னமே பந்துபாலன் சொல்லியிருந்தபடியால் இங்கேவந்து உன்னைப்பார்த்துப் பேரானந்தமடைந்தேனென்றான்.

இப்படி புஷ்போத்பவன் சொன்ன சரித்திரத்தைக்கேட்டு ராஜவாஹனன் அவனைப் புகழ்ந்து தன் கதையையும் ஸோமதத்தன் கதையையும் அவனுக்குச் சொல்லி, அவன் வந்தகாரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வரும்படி ஸோமதத்தனை விட்டுவிட்டு புஷ்போத்பவனோடு புறப்பட்டு அவந்திபட்டணம் வந்துசேர்ந்தான். அங்கே புஷ்போத்பவன், இவன் தங்களுடைய ராஜகுமாரனென்று அந்த நகரமெங்கும் பிரசித்தப்படுத்தி அநேகவித ஸம்மானங்கள் செய்வித்து அந்த ராஜகுமாரனைத் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டிருந்தான்.

## சமாசாரம்.

கங்காப்பிரவாகம்.—மின்தபால் சமாசாரத்தினால், கூனர் என்னும் இடத்தில் கங்கைநதியில் சாதாரண காலத்தின் அளவிற்கு மிஞ்ச வெள்ளம் பாய்ந்ததென்று அறியலானோம். அதனால், சுதேசிகள் வசிக்கிற பட்டணத்தில் மூன்றிலொருபங்கு வாரிக்கொள்ளப்பட்டது! எளிய ஐரோப்பியர் வசிக்கும் வீடுகளும் பொருளும் வாரிக்கொள்ளப்பட்டன; பிரஜைகள் அதிகப் பாடனுபவிக்கிறார்கள். கான்புரியிலும் கங்கையின் வெள்ளம் அதிகம்.

நூதன நீராவி கண்டுபிடித்தல்.—நீராவியந்திரங்களையும் படவுகளையும் கப்பல்களையும் இயங்கச்செய்வதற்கு வேண்டிய நூதன சக்தியொன்று அமெரிக்காவைச்சேர்ந்த பிலடெல்பியா நகரத்தில் வசிக்கும் கீலி என்னும் துரை கண்டுபிடித்தார். அந்தச் சக்தி தண்ணீரோடே கலந்த வாயுவினால் உண்டாகும். அந்த ஆவி கொதிஜலத்தினால் உண்டாகிற ஆவியிலும் அதிக சக்தியுள்ளது. அந்தச் சக்தியினால் யந்திரங்களை இயற்றுவதற்கேற்ற ஒரு சங்கம் அமெரிக்காவில் ஏற்பட்டது. அந்தச் சங்கத்தார் கீலி துரை கொண்ட ரகசியமான உபாயத்தை அறிவதற்கு 60,000-ரூபாய் அவருக்குக் கொடுக்கும்படியிருக்கிறார்கள். அந்தச் சக்தி பலிக்கத்தொடங்கியபின் 40,000-ரூபாய்கூடக் கொடுப்பார்கள்.

ரேவுத்தீர்வை மாற்றல்.—இந்திய கஜெட்டில் புது இந்தியதீர்வைச் சட்டம் அச்சடிக்கப்பட்டது. இறக்குமதி செய்யப்படும் சாதாரண சரக்குகளுக்குத் தீர்வை இதுவரையிலும்போல நூற்றுக்கு ஏழரைகொடாமல், நூற்றுக்கு அரைமாத்திரம் கொடுக்கவேண்டும். பருத்திப்பஞ்சு இதுவரையில் தீர்வையில்லாமல் ரேவுவழியாய்ச் சென்றது. இனி அதற்கு நூற்றுக்கு ஐந்து கொடுக்கவேண்டும். யுத்தஆயுதங்களும், யுத்தமுஸ்திப்புகளும் இறக்குமதி செய்ய நூற்றுக்குப் பத்துகொடுக்கவேண்டும். சாராயமும், உயர்ந்த திராக்ஷாரசமும் இறக்குமதிசெய்ய முன்னிலும் கலன் ஒன்றுக்கு ஒரு ரூபாய்கொடுக்கவேண்டும். அரிசி-நெல்-நீலம்-அரக்கு தீர்வையில்லாமல் ஏற்றுமதி செய்யலாகும். அவுரி டன் ஒன்றுக்கு மூன்றுரூபாய் கொடுக்கவேண்டும். விதம்விதமான நெசவுப்புடைவைகளுக்குக் கொடுக்கவேண்டிய தீர்வையை மாற்றுவதனால் வர்த்தகருக்குச் சகாயம் உண்டாகும். துரைத்தன வருமானத்திற்கு அதனால் 160,000-ரூபாய் நஷ்டம் உண்டாகும்.

இந்தியா ஸிவில் உத்தியோகத்தில் சுதேசிகள் பங்கடைதல்.—சில வருஷங்களுக்குமுன் பார்லிமெண்டில் உண்டான புதுச்சட்டத்தின்படி, இந்தியாவில் உள்ள சுதேசிகளில் நற்குணநற்செய்கை உத்தியோகத்திறமை இவைகளில் கீர்த்திபெற்றவர்கள் இந்தியாவைச்சேர்ந்த அங்கிலேய மஹாராணியார் ஏற்படுத்திய எந்த ஸிவில் உத்தியோகத்திற்கும் அங்கிலேயரைப்போல நியமிக்கப்படலாம் என்று கட்டளைபிறந்ததாம்.



WESTERN FRONT OF ST. MARK'S, VENICE.
வெனிஸ் நகரத்து ஸெண்டு மாற்கு என்னும் ஆலயம்.